
முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்! இன்று காலை 7.30 மணியளவில்

# சென்னையில் இன்று அமைதிப் பேரணி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது!

**சென்னை, ஆக.7-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி இன்று (ஆக. 7) கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணி நடைபெறுகிறது. இதில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. உள்ளிட்ட கழக முன்னணியினர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் ஏராளமான தோழர்கள் பங்கேற்கின்றனர்.**



ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம் மதச்சார்பின்மை உள்ளிட்ட அனைத்து முற்போக்கு இலட்சியங்களுக்காகவும் வாழ்நாள் முழுவதும் வாதாடி போராடி ஆட்சியில் இருந்த நேரங்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய நமது அருமைத் தலைவர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு இன்று (07.08.2023) 5ம் ஆண்டு நினைவு நாள். தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலும் அவர் கொண்ட கொள்கையாலும் சரித்திர சாதனைகளாலும் கலாச்சார நினைவுகளோடும் நம்மோடு வாழ்பவர் கலைஞர் அவர்கள்.

மனித நேயத்தோடு பழகிய பண்பாளர், எழுத்தால் ஈர்த்த தலைவர் பேச்சால் பரவசப்படுத்திய தலைவர். தமிழன் என்ற உணர்வை தழைக்கச் செய்தவர், அரசியல் பண்பாளர்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனை காண்போம்" என ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியவர். தந்தை பெரியார், பேறறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்த பன்முகம் கொண்ட தலைவரின் நினைவு நாள்.

சமூக நீதி கண்ட சமத்துவ தலைவர், சமதர்மக் கொள்கையை நிலைநாட்டியவர். மனிதநேயம் மிக்க தலைவரின் திருவுருவப்படத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் குடியரசுத் தலைவர் திருக்கரங்களால் திறக்கச் செய்து புகழ் சேர்த்து உள்ளார்கள்.

வாழ்நாள் முழுவதும் தமிழ் வாழ, தமிழர் வாழ, தமிழ்நாடு வாழ, தமிழ் கலாச்சாரம் வாழ வாழ்ந்த தலைவரின் நினைவைப் போற்றி புகழ்பாடுவோம். முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தகைமைசால் தலைவராக எழுத்தாளராக - கவிஞராக - சொற்பொழிவாளராக- திரைக்கதை வசனகர்த்தாவாக - இலக்கிய வாதியாக - திரைப்படத் தயாரிப்பாளராக - தலைசிறந்த நிர்வாகியாக - தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக - உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கிய வரும், திராவிட இயக்கத்தின் போர் வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்தகாவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 5வது நினைவுநாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் "அமைதிப் பேரணி", இன்று (ஆகஸ்ட் 7. திங்கள் கிழமை) காலை 7.30 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

கழக மாநில அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச்செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபா ன்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, அயலக அணி ஆகிய அனைத்து அணியினரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு சென்னை வடக்கு சென்னை வடகிழக்கு சென்னை மேற்கு சென்னை தென்மேற்கு சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியுள்ளனர்.

---

காவிரி மேலாண்மை வாரியத்திற்கே

# தமிழ்நாட்டிற்கு தண்ணீரை திறந்து விடும் அதிகாரம் உண்டு!

## வரலாறு தெரியாமல் கருத்து தெரிவிக்கும் - ஒன்றிய இணை அமைச்சருக்கு தமிழக நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பதில்!

**சென்னை, ஆக. 7 -**

**காவிரியின் வரலாறு தெரியாமல் கருத்து தெரிவித்திருக்கும் ஒன்றிய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் அவர்களுக்கு தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பதிலளித்துள்ளார்.**

**அதில், காவிரி மேலாண்மை வாரியத்திற்கே காவிரியில் தண்ணீர் திறந்து விடும் அதிகாரம் உண்டு என்று ஆணித்தரமாக குறிப்பிட்டுள்ளார்.**



இது குறித்து அமைச்சர் துரைமுருகன் அவர்களின் பதில் வருமாறு:

கடந்த இரண்டு மாதகாலமாக கர்நாடகம் தமிழகத்திற்கு உச்சநீதிமன்றம் அறிவித்த அளவுப்படி தண்ணீரை வழங்கவில்லை.

இது குறித்து முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பிரதமர் மோடி அவர்களுக்கும், ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சருக்கும் கடிதம் எழுதி இருக்கிறார்கள். ஒன்றிய நீர்வளத் துறை அமைச்சர் அவர்களை நான் இரண்டுமுறை நேரில் சந்தித்து நிலைமைகளை விளக்கி இருக்கிறேன்.

### காவிரி மேலாண்மை வாரியம் முழுமையாக செயல்படவில்லை!

காவிரியிலிருந்து தண்ணீரை திறந்து விடு என்று கூறுகிற அதிகாரம் காவிரி மேலாண்மை வாரியத்திற்குதான் உண்டு. அந்த வாரியம் கூட்டிய கூட்டங்களில் தமிழக நீர்வளத்துறை செயலாளர் சந்தீப் சக்சேனா அவர்கள் கலந்து கொண்டு தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிட கர்நாடகத்தை அறிவுறுத்த வேண்டும் என்று பலமுறை கோரிக்கை வைத்துள்ளார்.

ஆனாலும், காவிரி மேலாண்மை வாரியம் இதுவரையில் முழுமையாக செயல்படவில்லை. நீர் சராசரியாக கிடைக்கும் வருடங்களில் கர்நாடகம் எந்தெந்த மாதங்களில் எவ்வளவு திறந்து விடவேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. ஆனால், நீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் நீரை பகிர்ந்து கொள்வதை Pro Rata Basis என்று குறிப்பிடுவார்கள். அந்த பங்கீட்டை காவிரி மேலாண்மை வாரியம் இதுவரை செய்யவில்லை. இந்த வாரியம் ஒன்றிய அரசின் கீழ்இயங்குகிறது. எனவேதான் தமிழகத்திற்கு தண்ணீரை திறந்துவிட கர்நாடகத்தை அறிவுறுத்துமாறு வாரியத்திடம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். அந்த பணியை வாரியம் செய்ய வேண்டும் என்றுதான் தமிழக முதல்வர் அவர்களும் பிரதமருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

அந்த கடிதத்திற்கு பிரதமர் அலுவலகமோ அல்லது ஒன்றிய நீர் வளத்துறை அமைச்சரோ பதில் அளிக்காத நிலையில், ஒன்றிய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் என்பவர், கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆட்சி, தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி, இரண்டும் ஓர் அணியில் இருக்கிறார்கள் ஏன் பிரச்சினையைநேரில்பேசித் தீர்த்துக் கொள்ளக் கூடாது" என்று தெரிவித்திருக்கிறார்.

ஒன்றிய இணை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் அர்களுக்கு காவிரி பிரச்சினையின் முழு விவரம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். 1967 ஆம் ஆண்டிலிருந்து 1990 ஆம் ஆண்டு வரை இப்பிரச்சினை குறித்து பேசிபேசி எந்தமுடிவிற்கும் வர முடியாத நிலையில் தான் ஒன்றிய அரசு காவிரி நடுவர் மன்றத்தை அமைத்தது. காவிரி நடுவர் மன்றம் தீர்ப்பு வழங்கி, அந்த தீர்ப்பு உச்சநீதி மன்றத்திற்கு போய், உச்சநீதிமன்றம் சிலதிருத்தங்களோடு தீர்ப்பு வழங்கிவிட்டபிறகு இரு மாநிலங்களிடையே பேச்சு வார்த்தை என்பதற்கே இடமில்லை. பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடிந்திருந்தால் நடுவர் மன்றம் அமைத்திருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. இவையெல்லாம் நீண்டகாலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற வரலாறு.

### உரிமையை நிலைநாட்டுவதில் அவரவர் உறுதி!

'தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுவேறு' என்று கிராமங்களில் கூறுவது போல, தோழமையாக இருந்தாலும் தோழமையாக இல்லாவிட்டாலும் அவரவர் உரிமையை நிலை நாட்டுவதில் அவரவர்கள் உறுதியாக இருப்பார்கள். அந்த நிலைப்பாடுதான் தமிழகத்தின் நிலைப்பாடு.

இந்த விவரமெல்லாம் தெரியாமல் ஒன்றிய இணை அமைச்சர் ஒருவர் தளபதிக்கு அறிவுரை சொல்வது போல் ஓர் அறிக்கை விட்டிருப்பது வேடிக்கையாக இருக்கிறது.


### அடிப்படை வரலாறு தெரியாமல் பேசும் ஒன்றிய அரசு!

இதில் இன்னொரு வேடிக்கை. வேடிக்கையானது மட்டுமல்ல வேதனையானது என்னவென்றால், தமிழகத்தின் நீர்வளத்துறை அமைச்சராகவும், முன்னாள் முதல்வராகவும் இருந்தவருமான ஓ.பன்னீர்செல்வம் ஒரு அறிக்கையில், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கர்நாடக மாநில முதல்வரோடும், நீர்வளத்து றை அமைச்சரோடும் பேசி தண்ணீரை பெறவேண்டும் என்று தெரிவித்திருப்பதுதான். இனி பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என்ற நிலையில்தான் நடுவர் மன்றம் போனோம், தீர்ப்பு பெற்றிருக்கிறோம். இந்த தீர்ப்பில் ஏதாவது பிரச்சினை என்றால் உச்சநீதி மன்றத்தைத்தான் நாடவேண்டுமேதவிர, மீண்டும் கர்நாடக மாநிலத்தோடு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கூறுவது காவிரி பிரச்சினையின் அடிப்படை வரலாறே தெரியாத தனம்தான். பாவம், அரசியல் பிரச்சினையில் ஓ.பன்னீர்செல்வம் மிகவும் குழம்பிப் போய் இருக்கிறார் என்பதைத்தான் அவர் அறிக்கை காட்டுகிறது.

இவ்வாறு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

# மாவீரர் கலைஞர்; மறைந்தும் நிறைந்தும் இருக்கிறார்!



**எ**ம் அகம்நிறை அய்யா, கலைஞர் அவர்களே !

இன்று ஆகஸ்ட் 7, உங்களுடைய நினைவு நாள் !

நினைவுநாள் என்பது மறைந்த நாள் !

**எல்லா நாளிலும், உங்களைப் பற்றிய நினைவே எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும்போது, நினைவு நாள் என்பது காலக் குறியீடேயன்றி வேறில்லை. நீங்கள் மறைந்து, எவ்விடத்தும் நிறைந்தி ருக்கிறீர்கள்; நேரடியாகப் பார்த்துப் பார்த்து, உடன் பிறப்புகளை ஒவ்வொரு நொடியும் நெறிப்படுத்திக் கொண்டிருந்த நீங்கள், மறைந்திருந்து பார்த்து, உங்களின் மகத்துவத்தை எமது மனதினில் எந்நாளும் மின்னலாய்ப் பாய்ச்சிக் கொண்டுள்ளீர்கள்!**

எனவே நீங்கள் மரணமடைந்து விட்டீர்கள் என்று எம் நெஞ்சம் எப்படி ஏற்றுக்கொள்ளும்? கண்காணும் காட்சி எதிலும், செவி கேட்கும் செம்பொருள் அனைத்திலும், நீங்களே நீக்கமற நிறைந்திருக்கும்போது, இறந்து விட்டீர்கள் என்று எம் இதயந்தான் எண்ணிப் பார்த்திடுமோ? அந்தக் கொடும் பிழையை எப்போதும் இழைத்ததில்லை எமது இதயம்!

நீங்கள் மரணமடையவுமில்லை, இறந்து விடவுமில்லை. **"வீரன் சாவதே இல்லை"** என்று விவேகமொழி பகர்ந்தவர் நீங்கள்தானே!

**நீங்கள் இயற்கையிலேயே வீரராய் இருந்ததனால்தானே;**

திருவாரூரில் உங்களுடைய திருமண நாளன்று, பெரியார் வாழ்க! தமிழ் வாழ்க! இந்தி வீழ்க! என்ற முழக்கங்களோடு , தமிழ் வீரத்துடன் சொந்த மண விழாவினையே புறக்கணித்துவிட்டு, இந்தி எதிர்ப்பு ஊர்வலத்துடன் கலந்துவிட்டீர்கள்!

**நீங்கள் இயல்பாகவே வீரராய் இருந்ததனால்தானே;**

கல்லக்குடி போராட்டத்திலே தலைமை ஏற்று, **"எங்களுக்கு முன்னே நின்றிருந்த ரயிலின் 'கிரீச்' என்ற சப்தமோ - அல்லது ரயில் எம்மீது ஏறி எமது எலும்புகள் 'மளுக்' 'மளுக்' என்று முறியும் சப்தமோ - தில்லி ஆட்சி பீடத்தின் காதில் எட்டுமோ எட்டாதோ? மக்கள் மன்றத்திற்கு எட்டும், நிச்சயமாக எட்டும். அது இந்த ஆதிபத்தியக்காரரை ஆயிரம் தேள்போலக் கொட்டும்"** என்ற மன தைரியத்துடன், கடலின் கொந்தளிப்பு உள்ளத்திலே, காலைக் கதிரவனின் நிறம் கண்களிலே, சேவலின் மிடுக்கு நடையினிலே எனும்படி, நடைபோட்டுச் சென்று, தண்டவாளத்திலே தலை வைத்துப்படுத்தீர்கள் !

**நீங்கள் விவேகம் மிக்க வீரராகவே வளர்ந்ததனால்தானே;**

இந்திய அரசியலில் முன்னணியினர் பலரும் இந்திராவின் அவசர நிலைப் பிரகடனத்திற்கு அஞ்சி நடுங்கிப் பதுங்கிய போது, **"உண்மையின் உருவம் மறைக்கப்பட்டு, பொய்யின் நிழலில் நின்றுகொண்டு, எதிர்க் கட்சிகளை அடக்கு வதற்குத் திட்டம் தயாரித்து, அந்தத் திட்டம் ஏன் தேவைப்படுகிறது என்பதற்கான போலிக் காரணங்களைத் தேடி அலைந்து, வீண் அபவாதங்களை வாரி இறைத்து எடுத்ததற்கெல்லாம் சதி, வெளிநாட்டுத் தொடர்பு, பிற்போக்குவாதிகள் என்ற சொற்கணைகளைப் பொழிந்து காலா காலத்திற்கும் இந்திய நாட்டு மக்களுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில், சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழா நடைபெற்றுள்ளது"** என்று; நீங்கள் ஒருவர்தானே, ஆவேசம் கொண்டு அழிவு தரும் அவசர நிலையைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றினீர்கள் !

**நீங்கள் வீரராகவே பிறந்து, வீரராகவே விளங்கியதனால்தானே;**

அன்றொரு நாள்,உங்கள் பிறந்த நாளுக்கு முதல்நாள், வீட்டிலிருந்து காரில் புறப்பட்டு, ஆயிரம் விளக்குப் பகுதியைத் தாண்டியதும் காரிலிருந்து இறங்கி, எமர் ஜன்சியை எதிர்க்கும் அறப்போர் விளக்கத் துண்டுப் பிரசுரங்களை உங்கள் கையிலே எடுத்துக் கொண்டு அதனை அண்ணா சாலையில் செல்வோர் அனைவரிடமும் நீங்களே விநியோகிக்க - மக்கள் ஆவலுடனும், ஆச்சரியத்துடனும் உங்களைப் பின்தொடர, போக்குவரத்து ஸ்தம்பித்த நிலையில்,நடந்து கொண்டே அண்ணா சிலை அடிபீடம் வரை சென்று, கம்பீரமாகப் பறக்கும் கழகக் கொடியைக் கையிலே ஏந்தி, திடீரெனச் சேர்ந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான தோழர்கள் மத்தியிலே,சர்வாதிகாரம் வீழ்க! ஜனநாயகம் வாழ்க! என்று வீராவேசத்துடன் முழக்கமிட்டீர்கள்!

**உங்கள் பிறப்பிலிருந்தே தொடர்ந்த மன உறுதியினால்தானே;**

கட்சிக்குள்ளே பேசித் தீர்வு காண வேண்டிய பிரச்சினையை, திட்டுமிட்டு வெளியே, பொதுத் திடலில் மக்களைக் கூட்டி வைத்துக் கொண்டு பேசிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.அவர்களை, கட்டுப்பாடு பேண கட்சியை விட்டே விலக்கி வைக்கவும்; சட்டப் பேரவைத் தலைவராக இருந்த கே.ஏ.மதியழகன் அவர்களை, சூழ்ச்சியான எண்ணத்துடனும், ஏற்ற பதவிக்கு முரண்பாடாகவும் அவைக்குள்ளேயே நடந்து கொண்டதால்,பதவியிலிருந்து இறக்கவும்; கட்சியின் பெரும்பான்மையோரின் எண்ணத்தை அறிந்து, தீர்மானித்தீர்கள் !

**அய்யா, இவ்வாறு உங்கள் வாழ்க்கை நெடுகிலும் வீர வரலாற்றின் ஏராளமான பக்கங்கள். "வீரம் விலை போகாது, விவேகம் துணைக்கு வராவிட்டால்" என்று, முறை வகுத்ததும் நீங்களே! விவேகமும், வீரமும் விடியலைப் போலத் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும்; பகலோ இரவோ, விடியலை மாற்றிப் போடுவதில்லை.உங்களுடைய வாழ்க்கை, தமிழுக்கும், தமிழ்இனத்திற்கும் கிட்டிய விடியல்.தமிழ் மொழியின் நெஞ்சத்திலும்,தமிழ் இனத்தின் நினைவிலும் எழுச்சியின் ஏற்றமிகு சிற்பமாய் நிலைத்து விட்டவர் நீங்கள் !**

அலெக்ஸாண்டரைப் போன்ற மாவீரர் நீங்கள் ! நாடுகள் தோறும் படையெடுத்து, வெற்றிக் கொடி நாட்டிய கிரேக்க மாவீரனைப் போல; தமிழ் இலக்கியத்தின் வகைகள்தோறும், புலமை துணை கொண்டு, தொகை தொகையாய்ப் புத்திலக்கியம் படைத்து, வெற்றிக் கொடி நாட்டிய மாவீரர் நீங்கள்!

**உங்களுக்கு ஏது இறப்பு ? என்றும் இருப்பு மட்டுமே! மறைந்தும், எங்கணும் நிறைந்திருக்கும் மாமனிதர் நீங்கள்!**

**அய்யா, நீங்கள் 'அசல்' ; இன்று எம் தளபதி, அசலின் 'நகல்'. நகலை, நாளும் கண்டு கண்டு, அசலின் அருமையை ஆர்ப்பரிக்கிறது தமிழ் கூறு நல்லுலகம் !**

●●●

: கி.இராஜமாணிக்கம் :